No. of Printed Pages : **11**

# 3318 (NS)

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## PART - III

## புவியியல் / GEOGRAPHY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 70

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 70

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

### பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. __________ என்பது மக்கள் தொகைப் புள்ளி விவரப் படிப்பாகும்.

(அ) உயிரினப் புவியியல் (ஆ) மக்களியல்

(இ) புவியியல் (ஈ) மானிடப் புவியியல்

__________ is the statistical study of human population.

(a) Bio Geography (b) Demography

(c) Geography (d) Anthropogeography

2. இவற்றுள் எவை அதிக மக்களடர்த்திக் கொண்ட பகுதிகள் அல்ல ?

(அ) பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு, ஹவாங்கோ பள்ளத்தாக்கு மற்றும் வடமேற்கு ஐரோப்பா.

(ஆ) கங்கைப் பள்ளத்தாக்கு, பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு மற்றும் கிழக்கு ஆசியா.

(இ) கங்கைப் பள்ளத்தாக்கு, பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வடகிழக்குப் பகுதிகள்.

(ஈ) சகாரா, கிழக்கு சைபீரியா மற்றும் படகோனியா பகுதி.

Which of the following are not densely populated areas ?

(a) Brahmaputra Valley, Hwang-Ho Valley and North Western Europe.

(b) The Ganges Valley, Brahmaputra Valley and Eastern Asia.

(c) The Ganges Valley, Brahmaputra Valley and NE USA.

(d) Sahara, Eastern Siberia and Patagonia region.

3. 2050 -ல் வளர்ந்து வரும் மற்றும் வளர்ந்த நாடுகள் நகரமயமாகும் என்று கணிக்கப்பட்ட அளவு :

(அ) முறையே 44% மற்றும் 66% (ஆ) முறையே 74% மற்றும் 76%

(இ) முறையே 64% மற்றும் 86% (ஈ) முறையே 54% மற்றும் 96%

It is predicted that by 2050 about the developing world and the developed world will be urbanized to :

(a) 44% and 66% respectively (b) 74% and 76% respectively

(c) 64% and 86% respectively (d) 54% and 96% respectively

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை கருத்தில் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**வாக்கியம் I :** நாகாலாந்து மாநிலத்தின் வடகிழக்கு பகுதியின் கடைகோடியில் அங்காமி பழங்குடியினர் காணப்படுகின்றனர்

**வாக்கியம் II :** அங்காமி பழங்குடியினரின் முக்கிய திருவிழா லாசர் ஆகும்.

(அ) **வாக்கியம் I** மற்றும் **வாக்கியம் II** தவறானவை

(ஆ) **வாக்கியம் I** சரியானது **வாக்கியம் II** தவறானது

(இ) **வாக்கியம் I** தவறானது **வாக்கியம் II** சரியானது

(ஈ) **வாக்கியம் I** மற்றும் **வாக்கியம் II** சரியானது

Consider the statements given below and choose the right option from the given conclusion :

**Statement I :** Angami tribe belongs to the north eastern part of the country, in the State of Nagaland.

**Statement II :** Losar is the main festival celebrated among the Angamis.

**Conclusion :**

(a) **Statement I** and **Statement II** are wrong.

(b) **Statement I** is right. **Statement II** is wrong.

(c) **Statement I** is wrong. **Statement II** is right.

(d) **Statement I** and **Statement II** are right.

5. பின்வரும் வாக்கியங்களை கவனித்து அதில் சரியானவற்றை தேர்ந்தெடுக்கவும் :

(i) ஆஸ்திரேலியா, பிரேசில், ரஷ்யா, சீனா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், உக்ரைன், கனடா போன்ற நாடுகளில் நல்ல தரமான இரும்பு தாது காணப்படுகிறது

(ii) உலகின் நிரூபிக்கப்பட்ட இரும்பு வைப்பில் ரஷ்யா மூன்றாவதாக உள்ளது

(iii) உலகின் மிகப்பெரிய இரும்பு தாது உற்பத்தியாளர் ஆஸ்திரேலியா ஆகும்

(iv) மிக அதிக அளவிலான (84%) இரும்புத் தாதுவை 10 நாடுகள் மட்டுமே உற்பத்தி செய்கின்றன

(அ) (i) மற்றும் (iv) மட்டும் (ஆ) (i) மற்றும் (ii) மட்டும்

(இ) (i) மற்றும் (iii) மட்டும் (ஈ) (iii) மற்றும் (iv) மட்டும்

Find the correct statements :

(i) Good quality Iron ore is found in Australia, Brazil, Russia, China, USA, Ukraine, Canada, etc.

(ii) Russia has the third largest proven reserve of iron ore in the world.

(iii) Australia is the largest producer of Iron ore in the world.

(iv) The majority of Iron ore is (84%) produced by 10 countries alone.

(a) (i) and (iv) only (b) (i) and (ii) only

(c) (i) and (iii) only (d) (iii) and (iv) only

6. பின்வருவனவற்றுள் எவை கனிமங்களை பாதுகாக்கும் ஒரு வழிமுறை அல்ல ?

(அ) அத்தியாவசியமற்ற கனிமங்களின் பயன்பாட்டை ஊக்கப்படுத்துதல்

(ஆ) மக்கள் தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்துவதன் மூலம் கனிமங்களின் தேவையை குறைத்தல்

(இ) கனிம வளங்களை பாதுகாக்க சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

(ஈ) கனிமங்களை மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாட்டிற்கு உட்படுத்துதல்

Which of the following is not a method of conservation of minerals ?

(a) Encouraging the use and acceptance of minerals which are not essential.

(b) Controlling population growth to reduce demand for minerals.

(c) Creating social awareness regarding conservation of minerals.

(d) Reusing and Recycling of minerals.

7. பின்வருவனவற்றுள் எது வளர்ச்சியடைந்த நாடுகளை உள்ளடக்கியது ?

(அ) பாகிஸ்தான், இலங்கை, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலி

(ஆ) ஆஸ்திரேலியா, கென்யா, பாகிஸ்தான், ஜெர்மனி மற்றும் இத்தாலி

(இ) ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலி

(ஈ) ஆஸ்திரேலியா, இலங்கை, தாய்லாந்து, ஜெர்மனி மற்றும் இத்தாலி

Which one of the following includes the developed countries ?

(a) Pakistan, Sri Lanka, France, Germany and Italy.

(b) Australia, Kenya, Pakistan, Germany and Italy.

(c) Australia, Canada, France, Germany and Italy.

(d) Australia, Sri Lanka, Thailand, Germany and Italy.

8. செரிகல்சர் __________ வளர்க்கும் கலையாகும்.

(அ) பட்டுப்புழு (ஆ) பழங்கள்

(இ) காய்கறிகள் (ஈ) பூக்கள்

Sericulture refers to rearing of _________.

(a) Silkworms (b) Fruits

(c) Vegetables (d) Flowers

9. எந்த நாடு அதிக எண்ணிக்கையிலான அண்டை நாடுகளுடன் எல்லைகளைக் கொண்டுள்ளது ?

(அ) இந்தியா (ஆ) சீனா (இ) கனடா (ஈ) ரஷ்யா

Which country has the maximum number of neighbours touching its border ?

(a) India (b) China (c) Canada (d) Russia

10. எது சரியாக பொருந்தியுள்ளது ?

(அ) திராவிட - சமஸ்கிருதம், கரேன், மணிப்பூரி முதலியன

(ஆ) ஆஸ்ட்ரிக் - முண்டா, மான் கிமர்

(இ) சீன - ஹிந்தி, உருது, சமஸ்கிருதம்

(ஈ) இந்தோ - ஆரியன் - திபெத்தியன், போடோ, கரேன், மணிப்பூரி போன்றவை

Which one is rightly matched ?

(a) Dravidan - Sanskrit, Karen, Manipuri, etc.

(b) Austric - Munda, Mon-Khmer.

(c) Sino - Hindi, Urdu, Sanskrit.

(d) Indo - Aryan - Tibetan, Bodo, Karen, Manipuri, etc.

11. சரியாக பொருந்தாதது எது ?

(அ) BEODOU - சீனா

(ஆ) GPS - அமெரிக்க ஐக்கிய நாடுகள்

(இ) GLONASS - இரஷ்யா

(ஈ) GALILEO - ஜப்பான்

Which one is wrongly matched ?

(a) BEODOU - China

(b) GPS - United States

(c) GLONASS - Russia

(d) GALILEO - Japan

12. கீழ்க்கண்டவற்றில் எது தொலை நுண்ணுணர்வு பயன்படும் மண்ணியல் சார்ந்த துறை அல்ல ?

(அ) ஹைட்ரோ கார்பன் ஆய்வு

(ஆ) இயற்கூறுகள் சார்ந்த நிலவரைபடம் தயாரித்தல்

(இ) கட்டமைப்பு நிலவரைபடம் தயாரித்தல்

(ஈ) வனவிலங்கு ஆய்வு

Which one of the following is not used in the field of geology remote sensing techniques ?

(a) Hydrocarbon exploration

(b) Lithological mapping

(c) Structural mapping

(d) Wildlife exploration

13. உள் நாட்டிற்குள்ளும் உலக நாடுகளுக்கிடையேயும் சமமற்ற நிலையை குறைத்தல் என்பது பேணத்தகுந்த மேம்பாட்டு :

(அ) இலக்கு 5 (ஆ) இலக்கு 10 (இ) இலக்கு 7 (ஈ) இலக்கு 15

Reducing inequality within and among countries fall under sustainable development :

(a) Goal 5 (b) Goal 10 (c) Goal 7 (d) Goal 15

14. சர்வதேச இயற்கை பாதுகாப்பு சங்கம் எந்த ஆண்டு பேணத்தகுந்த மேம்பாடு என்கின்ற சொல்லை பயன்படுத்த ஆரம்பித்தது ?

(அ) 1960 (ஆ) 1990 (இ) 1980 (ஈ) 1970

The International Union for the Conservation of Nature introduced the term "Sustainable development" in :

(a) 1960 (b) 1990 (c) 1980 (d) 1970

15. நில் (stop), விழு (drop) மற்றும் உருள் (roll) என்பது எதன் முக்கிய மாதிரிப் பயிற்சி ?

(அ) வெள்ளம் (ஆ) தீ (இ) நிலநடுக்கம் (ஈ) மின்னல்

It is important to practice stop, drop and roll for :

(a) Flood (b) Fire (c) Earthquake (d) Lightning

## பகுதி - II/PART - II

குறிப்பு : **எவையேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். **24 -வது கேள்விக்கு கண்டிப்பாக** விடை எழுதவும். **6x2=12**

**Note :** Answer **any six** questions. Question **No. 24** is **compulsory.**

**16.** குறைவான மக்களடர்த்திக்கான நான்கு காரணங்களை கூறுக.

Mention the four reasons for low density of population.

**17.** 2011 -ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் பாலின விகிதம் என்ன ? இந்தியாவில் எந்த மூன்று மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் சாதகமான பாலின விகிதங்களை கொண்டுள்ளன ?

What is the sex ratio of India according to census 2011? Which three States /Union Territories have favourable sex ratio in India ?

**18.** இணைந்த நகரம் என்பதை வரையறுத்தவர் யார் ? இணைந்த நகரத்திற்கு ஒரு உதாரணம் கொடு.

Who defined the term Conurbation ? Give an example of Conurbation.

**19.** உலகின் மிகப் பெரிய காற்றாலை எங்குள்ளது ? ஜெய்சால்மர் காற்றுப் பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது ?

Where is the world's largest Wind Farm located ? Name the State in which Jaisalmar wind park is located.

**20.** தீவிர விவசாயம் என்றால் என்ன ?

What is Intensive Agriculture ?

**21.** இந்திய மொழிகளை முதன்மையாக உள்ளடக்கிய, நான்கு மொழிக் குடும்பங்கள் எவை ?

What are the four linguistic families, Indian languages mainly belong to ?

**22.** உலகின் முதல் GNS அமைப்பு எது ? இந்தியாவின் GNS அமைப்பு எது ?

Name the first GNS system in the world. What is the GNS system of India ?

**23.** மழை நீர் சேமிப்பின் இரு முக்கிய தொழில் நுட்பங்கள் என்ன ?

What are the two main techniques of rain water harvesting ?

**24.** பிடோய்ன் - குறிப்பு வரைக.

Write a note on Bedouin.

## பகுதி - III/PART - III

**குறிப்பு :** **ஏதேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். **33 -வது கேள்விக்கு கண்டிப்பாக** விடை எழுதவும். **6x3=18**

**Note :** Answer **any six** questions. Question **No. 33** is **compulsory.**

**25.** கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்தியாவின் வயது அமைப்பிலிருந்து சார்பு விகிதத்தைக் கணக்கிடுக. கிடைக்கும் முடிவிலிருந்து உன்னுடைய அனுமானத்தை எழுதுக.

| வயது அமைப்பு | சதவிகிதம் |
|---|---|
| 0-14 வயது | 27.34% |
| 15-64 வயது | 66.42% |
| 65 வயது மற்றும் அதற்கு மேல் | 6.24% (2017 மதிப்பீடு) |

Given below is age structure of India. Calculate the dependency ratio of India. Write an inference out of the result you get.

| Age Structure | Percentage |
|---|---|
| 0-14 years | 27.34% |
| 15-64 years | 66.42% |
| 65 years and over | 6.24% (2017 estimate) |

26. நகர்ப்புற விரிவாக்கத்திற்கான காரணங்களில் ஏதேனும் மூன்றினை எழுதுக.

Write any three causes of Urban sprawl.

27. வளங்களை பாதுகாக்கும் வழிமுறைகளில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

Mention any three ways of conserving resources.

28. தொழிலக அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை ?

List the factors affecting the location of Industries.

29. வான்தூனனின் வேளாண் கோட்பாட்டின் அனுமானங்களில் ஏதேனும் மூன்று எழுதுக.

Write any three assumptions of Vanthunen's agriculture theory.

30. எல்லைப்புறம் மற்றும் எல்லைக் கோடுகளிடையே உள்ள வேறுபாட்டைக் கூறுக.

Distinguish between Frontier and Boundary.

31. நாம், ஏன் உப்பு நீரைக் காட்டிலும் நன்னீரில் வேகமாக மூழ்குகிறோம் ?

Why do we drown faster in fresh water when compared to ocean water ?

32. மூழ்குதலைத் தடுப்பதற்கான வழிமுறைகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக.

Write any three preventive measures of drowning.

33. EIA -வின் செயல் திட்டங்கள் யாவை ?

What are the projects of EIA ?

## பகுதி - IV/PART - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5x5=25**

**Note :** Answer **All** the Questions.

**34.** (அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள அதீத மக்கள் தொகையினால் ஏற்படும் பிரச்சனைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் குறிப்பு வரைக.

(i) இயற்கை வளங்கள் தீர்ந்து போதல்

(ii) வாழிட இழப்பு அதிகரிப்பு

(iii) அதிகரித்து வரும் கால நிலை மாற்றம் மற்றும் உலக வெப்பமயமாதல்

**அல்லது**

(ஆ) கிராம மற்றும் நகர்ப்புற குடியிருப்பின் வகைகளை விளக்குக.

(a) Write a note on each about how the following are the problems of over population.

(i) Depletion of natural resources

(ii) Accelerated loss of habitat

(iii) Amplified Climate Change and Global Warming

**OR**

(b) Explain the classification of Rural and Urban Settlements.

**35.** (அ) தொழிலாளர்களின் அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துக.

**அல்லது**

(ஆ) இந்தியாவின் முக்கிய மொழிகளைப் பற்றி விவரிக்கவும்.

(a) Explain the classification of Industries on the basis of Labour.

**OR**

(b) Explain the major languages of India.

**36.** (அ) GIS -ன் ஏதேனும் மூன்று செயல்பாடுகளைப் பற்றி விரிவாக விளக்குக.

**அல்லது**

(ஆ) இந்தியாவில் சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு குறித்து விளக்குக.

(a) Describe any three functions of GIS in detail.

**OR**

(b) Explain the Environmental Impact Assessment in India.

**37.** (அ) மாணவர்களுக்கான அடிப்படை சாலைப் பாதுகாப்பு வழிகளைப் பட்டியலிட்டு அவற்றுள் ஏதேனும் மூன்றினை விளக்குக.

**அல்லது**

(ஆ) கூட்ட நெரிசலின் போது பின்பற்ற வேண்டிய செயல் விதிகளை விளக்குக.

(a) List the basic road safety rules for students and explain any three of them.

**OR**

(b) Explain the rules of action during Stampede.

**38.** (அ) கொடுக்கப்பட்டுள்ள உலக நிலவரை படத்தில் மில்லியன் நகரங்களை குறித்துக் காட்டி சிறு குறிப்பு எழுதுக.

**அல்லது**

(ஆ) உலக புறவரி நிலவரைபடத்தில் உலக பெட்ரோலிய பரவலைக் குறித்து, அதைப் பற்றி குறிப்பெழுதுக.

(a) Mark and explain the Million Cities on the outline map of World.

**OR**

(b) Mark and write the World Distribution of Petroleum on the outline map of World.

**- o O o -**